1984 மார்ச் 26]

பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்க 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு பங்கீட்டுக் கடை அமைக்கும் திட்டம்.

448—(*வினா எண். 21476) **திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

உணவுப் பொருள் விநியோகத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைக் குறைக்க ஒவ்வொரு ஐந்நூறு கார்டுகளுக்கு ஒரு பங்கீட்டுக் கடை என்று அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்பொழுது கிராமங்களைப் பொறுத்த வரை சராசரியாக 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை வீதம் திறக்கப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களைப் பொறுத்த வரை ஒரு நியாய விலைக் கடையில் 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கக்கூடாதென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு 500 குடும்ப அட்டைகளுக்கும் ஒரு நியாயவிலைக் கடை அமைப்பதானால் செலவு மிக அதிகமாகும்.

449—(*வினா எண். 21799) **திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) வருவாய்க் கிராமம் ஒன்றுக்கு ஒரு நியாய விலைக் கடை என்னும் திட்டத்தை பெரிய கிராமங்களின் விஷயத்தில் தளர்த்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கிராமப் பகுதியிலே 500 கார்டுகளுக்கு ஒரு கடையும் நகரப் பகுதியில் 2 ஆயிரம் அட்டைகளுக்கு ஒரு கடையும் ஏற்படுத்தப்பட்டு விநியோகம் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். நகரப் பகுதிகளிலே 2 ஆயிரம் அட்டைகள் ஒரு கடைக்குப் போட்டிருப்பதால் அந்தக் கடை சிறியதாக இருப்பதால் அதிகமான கூட்டம் ஏற்படுவதால் வாங்குகிற பொருளை சரியாக எடை போட்டு வாங்குகிற நிலை இல்லாமல் இருக்கிறது. பொருள் குறைந்து போகிறது என்ற புகார்கள் ஏராளமாக வருகின்றன. தற்போதுள்ள சிறு கடைகளை பெரிய கடைகளாக வைக்க அரசு ஆவன செய்யுமா ?